[30th March 1961

SRI R. SWAMINATHA MERKONDAR: இதைப்பற்றிய இன்வெஸ்டிகேஷன் நடப்பதாகச் சொன்னார்கள். அப்படியிருந்தால் பெரிய பாலம் கட்டுவதற்கு உத்தேசம் இருக்கிறதா ! அதற்காக தொகையிருக்கிறதா ?

THE HON. SRI P. KAKKAN: காஸ்வே கட்டுவதற்காக 14 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. பெரிய பாலம் கட்டுவது நல்லதுதானா என்று பரிசீலனையில் இருக்கிறது.

SRI T. K. SUBBIAH: சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்னமே பெரிய பாலம் கட்டவேண்டுமென்று திட்டங்கள் உருவாகி, சாமான்கள் கிடைக்காததினால் பாலம் கட்டுவது நின்றுவிட்டதாகச் சொல்லப்படுகிறது. இப்பொழுது 14 லட்சம் ரூபாய் ஒதுக்கப்படட இன்வெஸ்டிகேஷன் செய்யப்பட்டு வருகிறது என்று சொன்னார்கள். ஆனால்—

DEPUTY SPEAKER: கனம் அங்கத்தினர் அவர்கள் கேள்வியைச் சுருக்கமாகக் கேட்கவேண்டும். The hon. Member should not make a speech.

SRI T. K. SUBBIAH: இப்பொழுது மத்திய சர்க்கார் 14 லட்சம் கொடுக்கிற காரணத்தினால் பெரிய பாலம் கட்டுவதற்கு போதிய தொகையில்லையென்றால் இது கைவிடப்படுமா ? அல்லது எடுத்துக் கொள்ளப்படுமா என்று நிச்சயமாக தெரிவித்து ஒரு வாக்குறுதி அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

THE HON. SRI P. KAKKAN: போதிய தொகையில்லையென்றால் நிச்சயமாக காஸ்வே கட்டப்படும்.

DEPUTY SPEAKER: As the Hon. Finance Minister is not here, short notice Question No. 9 will be taken afterwards.

Price of food articles in hotels.

* *S.N.Q.* 10.—SRI N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Government is aware of the fact that there is a sudden spurt in prices of the following in the hotels in the State and particularly in the City of Madras:—

Coffee from 15 nP. to 20 nP.

Meals from 65 nP. to 75 nP.

Pakkoda from 15 nP. to 20 nP.

Pakalabath from 20 nP. to 25 nP.

(*b*) whether the size of the Idlis and Dosais has been reduced considerably; and

(*c*) if so, the action taken by the Government to check the price of the above articles?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) & (*b*) It has been brought to the notice of the Government that the hotels in the Madras City have increased the rates for meals, coffee and other edibles. There is no ready information about the hotels in the districts. The Commissioner of Civil Supplies, Madras and the District Collectors have been asked to enquire into the matter and find out the exact increase in the prices of meals and other items and the reasons adduced by the hotel keepers for the sudden

30th March 1961]

increase. A statement* received, in the meanwhile, from the Collector of Madras showing the increase in prices charged by hotels in Madras City, is placed on the table of the House. The list does not contain any information about Pakkoda and Bakalabath.

(b) The Government have no information on this point.

SRI N. K. PALANISAMI : இப்பொழுது அரசாங்கம் 30 கப் காப்பிக்கு ஒரு நை.பை வரி போட்டிருக்கிறது. ஆனால் அவர்கள் ஒவ்வொரு கப்புக்கும் இரண்டு நை.பை விலையை அதிகமாக்கியிருக்கிறார்கள். அதன் காரணமாக ஹோட்டல் முதலாளிகளை ஜெயிலில் போடுவதற்கு சர்க்கார் யோசிக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த அரிய யோசனைக்கு சட்டம் இடம் கொடுக்காது. சட்டப்படி எதெதில் கவனம் செலுத்த வேண்டுமோ அதில் கவனம் செலுத்தி, அக்கிரமமான விலை ஏற்றத்தைக் குறைப்பதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக்கும். மேலும் இதில் சம்பந்தப்பட்ட அரசாங்க அதிகாரிகள் தீவிர கவனம் செலுத்தி வருகிறார்கள்.

SRI M. KALYANASUNDARAM : கனம் உணவு அமைச்சர் அவர்கள் உணவுப் பண்டங்களின் விலை குறைந்துக்கொண்டு வருகிறதென்று சொன்னார்கள். ஆனால் ஒட்டல்களிலே அதிக விலையில் விற்கிறார்களே. இதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஹோட்டல் நடத்துவதே லாபகரமான தொழில் என்று கருதப்படுகிறது. சில சந்தர்ப்பங்களில் அதிக லாபம் சம்பாதிக்கலாம் என்று நினைக்கின்றனர். மற்றொரு காரணமும் கூறப்படுகிறது. அதாவது ஹோட்டல்களில் ஜனங்கள் கூட்டம் அதிகமாகி உட்காருவதற்குக்கூட இடமே இருப்பதில்லை. அப்படி கஷ்டமிருந்தாலும் மக்கள் ஏராளமாக ஹோட்டலில் சாப்பிடுவோர் எண்ணிக்கை குறையவில்லை. ஒரு வேளை விலையை ஏற்றினால் கூட்டம் குறையுமோ என்று ஹோட்டல் முதலாளிகள் நினைக்கக்கூடும் என்று சொல்லுகிறார்கள். ஆனால் அக்கிரமமான விலை ஏற்றத்தைக் குறைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

SRI A. A. RASHEED : Sir, may I know whether there is any proposal to fix the size of 'dosai' and 'idly' in the hotels?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I have no idea about it. There is no proposal. However, I would like the Hon. Member to give me a prescription for the size of dosai and idly, before I could consider whether anything could be done.

SRI K. ANBAZHAGAN : கனம் தலைவர் அவர்களே, விலை அக்கிரமமாக ஏறியிருக்குமானால் விலையைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக கனம் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அப்படியென்றால் இப்பொழுது ஏறியுள்ள விலை அக்கிரமம் இல்லை என்று கருதுகிறார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதைப்பற்றி கலெக்டரை விசாரித்திருக்கிறோம். அவர்களிடமிருந்து ரிபோர்ட் வந்தபிறகுதான் நடவடிக்கை எடுக்கப்படும்.

SRI A. R. SUBBIAH MUDALIAR : ப்ரெஸண்ட் ரேட் என்றால் எவ்வளவு வருஷமாய் நடைமுறையில் இருக்கிறது. திடீரென்று ஏறக் காரணம் கூட்டு அடிப்படையில் எதிர்ப்பு காண்பிக்க செய்திருக்கிறார்கள் என்று புறம்பாக பேசுகிறார்களே, அது சர்க்காருக்குத் தெரியுமா ?

---

* Printed as Appendix I on page 525 infra.

[30th March 1961

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதற்கு முன்பிருந்த விலைவாசி எந்தக் காலம் முதல் இருக்கிறது என்ற விவரம் என்னிடம் இல்லை. ஆனால் இதில் பெரும் எதிர்ப்பு ஒன்றுமில்லை. எக்ஸ்ப்ளாயிட்டேஷன்தான்.

SRI K. SATTANATHA KARAYALAR : சில குறிப்பிட்ட ஹோட்டல்களுக்கு சர்க்கார் நேரடியாக மலிவான விலையில் தானியங்களும், பொருள்களும் கொடுத்து அவர்களையாவது ஒரு கட்டுப்படுத்திய விலையில் விறக, அன்னபூர்ணா கான்டீனைப் போல் குறைந்த விலைக்கு கொடுக்க ஆங்காங்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : குறிப்பிட்ட ஹோட்டல்களுக்கு கொடுப்பதென்றால் அது விசேஷ சலுகையாகிவிடும். அவர்களுக்கு நல்லதாகயிருக்கலாம். ஆனால் அம்மாதிரி அரசாங்கம் செய்வது சாத்தியமல்ல.

SRI K. VINAYAKAM : In view of the disproportionate rise in prices of articles sold in hotels when compared to the supposed levy of taxes by the Central Government, will the Government take steps to convene a meeting or conference of the Hotel-owners Association in the City of Madras, find out what exactly is the cause behind the rise in prices of the articles sold in the hotels and arrive at a solution satisfactory to the consumers concerned ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : As I have already stated, I have asked the Civil Supplies Commissioner to contact directly some of the hotel-keepers in the Madras City and have asked the Collectors concerned to contact the hotel-keepers in the districts and have a discussion with them. I have further told the Civil Supplies Commissioner that he may first contact the hotel-keepers and have a discussion with them and after that I myself propose to meet them and talk to them and then see what further action we can take in the matter.

SRI V. K. KOTHANDARAMAN : ஆரம்பத்திலிருந்தே கையைத் தூக்கிக்கொண்டிருக்கிறேன்.

DEPUTY SPEAKER : எல்லோரையும் உபகேள்விகள் கேட்க அனுமதிக்க முடியுமா ?

SRI V. K. KOTHANDARAMAN : இது மிகவும் முக்கியமான சமாசாரம்.

DEPUTY SPEAKER : அதற்குப் பதில் சொல்லியாகிவிட்டது. I know which question is important and which is not. The hon. Member may resume his seat.

SRI V. K. KOTHANDARAMAN : ஒன்றே ஒன்று.

DEPUTY SPEAKER : I am sorry, I cannot allow further supplementaries. The hon. Member may resume his seat.

SRI V. K. KOTHANDARAMAN : ஹோட்டலில் சாப்பிடக்கூடியவன் நான், இது ஒரு பிரதான பிரச்னை.

DEPUTY SPEAKER : நானும்தான் ஹோட்டலில் சாப்பிடுகிறேன். I am not going to allow the hon. Member to put a supplementary now. பின்னர், மறுபடியும் அனுமதிக்கிறேன். We may take up the next question.

(Some hon. Members were heard to say, 'Sir, Sir.')

30th March 1961]

DEPUTY SPEAKER : It is not in order for the hon. Members to say ' Sir, Sir.' Only those hon. Members who catch the eye of the Chair will be called to put supplementaries.

Houses for scavengers

*1181 *Q.*—SRI S. M. ANNAMALAI: கனம் பொதுமராமத்து அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

முனிசிபாலிட்டிகளில் வேலை செய்யும் நகர சுத்தித் தொழிலாளர்களுக்கு வீடு கட்டும் திட்டம் மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்படவேண்டுமென்று மத்திய சர்க்கார் மாநில சர்க்காருக்கு ஆலோசனை கூறியுள்ளார்களா ?

THE HON. SRI P. KAKKAN : Yes, sir.

SRI T. SAMPATH : Will the scheme be included in all municipalities ?

THE HON. SRI P. KAKKAN : I think so, sir.

SRI S. M. ANNAMALAI : மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இதற்காக வேண்டி எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது, எந்தெந்த யிடங்களில் கட்டப்படும் ?

THE HON. SRI P. KAKKAN : இதற்காக மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 30 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஸ்தலஸ்தாபனங்களுக்கு கொடுக்க இது ஒதுக்கப்பட்டிருக்கிறது. எங்கு கட்டுவது என்பது குறித்து, ஐ.எல்.பி.யிடம் கேட்டிருக்கிறோம். அவர்கள் ரிபோர்ட் சமர்ப்பித்தவுடன் முடிவு செய்யப்படும்.

SRI P. G. MANICKAM : மூன்ருவது திட்டத்தில் ரூபாய் 30 லட்சம் ஒதுக்கியிருப்பதாக கனம் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இந்தத் தொகை முனிசிபாலிட்டிகளில் வேலை செய்யும் நகரசுத்திதொழிலாளர்களுக்கு மட்டும்தான் செலவழிக்கப்படுமா? அல்லது மேஜர் பஞ்சாயத்து போர்ட்களில் உள்ள நகரசுத்தி தொழிலாளர்களுக்கும் இந்தத் திட்டத்தை விஸ்தரிப்பதுபற்றி அரசாங்கம் பரிசீலனை செய்யுமா?

THE HON. SRI P. KAKKAN : முனிசிபாலிட்டி, மேஜர் பஞ்சாயத்து எல்லாம் சேர்ந்திருக்கும் என்று நினைக்கிறேன். பெரும் பகுதி முனிசிபாலிட்டியிலுள்ள நகரசுத்தி தொழிலாளர்கள் கஷ்டப்படுவதால் அவர்கள் பிரச்னை கவனிக்கப்படும்.

SRI N. MARUDACHALAM : நகரசுத்தி தொழிலாளர்களுக்கு எந்தெந்த நகரங்களில் எவ்வளவு வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும்?

THE HON. SRI P. KAKKAN : மத்திய சர்க்காரிலிருந்து 50 சத விகிதம் கொடுக்கிருர்கள். 50 சத விகிதம் ஸ்தலஸ்தாபனங்கள் ஏற்றுக் கொள்ளவேண்டும். எந்த எந்த ஸ்தலஸ்தாபனங்கள் 50 சத விகிதம் கொடுக்கத் தயாராயிருக்கிறதோ அப்பொழுது ஐ.எல்.பி. எங்கெங்கு தேவையிருக்கிறதோ அங்கு கொடுக்க ஏற்பாடு செய்வார்கள்.

SRI M. KALYANASUNDARAM : இந்தமாதிரி கட்டப்படும் வீடுகளில் வாடகை அதிகமாக இருக்கிற காரணத்தினல் நகரசுத்தி தொழிலாளர்கள் அதை உபயோகப்படுத்த முடியாமல் அவை மற்றவர்களுக்கு கொடுக்கப்பட்டு வருகிறதென்பது கனம் அமைச்சர் அவர்களுக்குத்தெரியுமா ? ஆகவே, வாடகையைக் குறைத்து நகரசுத்தித் தொழிலாளர்களுக்குக் கொடுக்க உத்தரவிடுவார்களா ?

THE HON. SRI P. KAKKAN : இது ஒரு வாடகை பிரச்னையல்ல. ரூபாய் 2½-க்குக் கொடுக்க திட்டமிட்டிருக்கிருர்கள். நகரசுத்தி தொழிலாளர்களிடம் வாடகை வாங்குவதா இல்லையா என்பது முடிவுசெய்யவில்லை. அவர்கள் எவ்வளவு காலம் நகரசபையில் வேலை செய்கிருர்களோ அதுவரை அங்கிருக்கலாம். பின், மற்றவர்கள் வந்தால் அவர்களுக்கும் கொடுக்கப்படும்.